அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல: 367

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு. 7
1987, மே 6

சேரல்:
அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
திணைக்களங்களின் தலைவர்கள் யாவர்க்கும்.

அரசாங்க உத்தியோகத்தர்களின் இளைப்பாறுகை நோக்கிய லீவும் காலங்கடந்த லீவும்- தாபன விதிக்கோவை - அத்தியாயம்

---

(1) 11ஆம் பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை இடுக:

"11. இளைப்பாறுகை நோக்கிய லீவு

11.1. 8ஆம் பிரிவின் கீழ் ஓய்வு லீவுக்கும் உரித்துள்ள உத்தியோகத்தர் ஒருவருக்கு, அவர் இளைப்பாறுவதற்கு நேர்முன்பாக, அவருக்குக் கிடைக்கக் கூடியதாகவுள்ள ஏதாவது இரண்டு வருடப் பயன்படுத்தப்படாத ஓய்வு லீவை அவர் இளைப்பாறும் நேரத்தில் வழங்கலாம்.

11.2. இளைப்பாறுகைக்கு முன்பான லீவுக்கு மேலதிகமாக உத்தியோகத்தருக்கு நடப்பு ஆண்டுக்குரிய ஓய்வு லீவும் 8ஆம் பிரிவுக்கு அமைய வழங்கப்படலாம்.

11.3. முறையே 26ஆம் பிரிவின் கீழும் 27ஆம் பிரிவின் கீழும் லீவு வழங்கப்படும் சிறு பணியாளருக்கு அல்லது நாட் சம்பள உத்தியோகத்தருக்கு அவர் ஓய்வு பெறும் வருடத்திலும் அதற்கு முந்திய வருடத்திலும் உள்ள அவருக்குரிய பிணி லீவை அவர் அப்பிரிவின் கீழ் ஓய்வு பெறும் போது இளைப்பாறுகை நோக்கிய லீவாக வழங்கலாம். அத்துடன், அவர் ஓய்வு பெறும் வருடத்தில் அவரால் பயன்படுத்தப்படாதுள்ள எல்லா அமய லீவையும் அனுமதிக்கலாம். ஆயின், அவர் அந்த வருடத்தில் வேலை செய்திருத்தல் வேண்டும்.

11.4. வினைத்திறனின்மை காரணமாக ஓய்வு கொடுக்கப்படும் உத்தியோகத்தர் ஒருவர் இளைப்பாறுகை நோக்கிய லீவுக்குத் தகுதி உடையவராகார். அத்தகைய லீவுக்கும் அவர் தகுதி உடையவராவதற்கு நேர்மையான அல்லது விரும்பத்தக்க விசேட சூழ்நிலைகள் இருத்தல் வேண்டும். அத்தகைய சந்தர்ப்பத்தில் அத்தகைய லீவை வழங்குவதற்கான விண்ணப்பம் செயலாளருக்கு அனுப்பப்படுதல் வேண்டும். அந்த விண்ணப்பத்தில் லீவு வழங்குவதை நியாயப்படுத்துவதற்கான சூழ்நிலைகளையும் விளக்குதல் வேண்டும்.

11.5. நியமிப்பிலிருந்து விலகுவதாகக் கூறி பதவி துறப்புக் கடிதத்தைச் சமர்ப்பித்த ஓர் உத்தியோகத்தர் அவர் அக்கடிதத்தைச் சமர்ப்பித்த நாளிலிருந்து ஏதேனும் ஓய்வு லீவுக்கோ அமய லீவுக்கோ தகுதி உடையவராகார்.

..4

(ii) 10:1ஆம் உபபிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை இடுக:

"10:1. உட்பிரிவு 8:2இன் கீழ் சகல ஓய்வு லீவையும் பயன்படுத்திய உத்தியோகத்தர் ஒருவருக்கு மேலும் லீவு தேவைப்பட்டால், திணைக்களத் தலைவரது தற்றுணிபின் பேரில் இரண்டு வருட காலப் பகுதிக்குரிய பயன்படுத்தப்படாத ஓய்வு லீவு, பின்வரும் உட்பிரிவுகளுக்கு அமைய அவருக்கு வழங்கலாம்.

10:1:1. உத்தியோகத்தர் ஒருவருக்கு அத்தகைய லீவு மருத்துவ காரணங்களுக்காகத் தேவைப்பட்டால் அவருக்குச் சாதகமாக இருக்கும் ஏதாவது இரண்டு வருடத்துக்குரிய (தொடர்ச்சியாகவோ அல்லாமலோ) பயன்படுத்தப்படாத ஓய்வு லீவு அவருக்கு அனுமதிக்கப்படலாம்.

10:1:2. உத்தியோகத்தர் ஒருவருக்கு அத்தகைய லீவு மருத்துவ காரணங்கள் தவிர்ந்த ஏனைய காரணங்களுக்காகத் தேவைப்பட்டால் அவருக்குத் தொடர்ச்சியான இரண்டு வருட காலப்பகுதிக்குரிய பயன்படுத்தாத ஓய்வு லீவு அனுமதிக்கப்படலாம்.

10:1:3. சாதாரணமாக ஓர் உத்தியோகத்தர் ஏதாவது ஓர் ஆண்டில் அத்தகையவொரு காலப்பகுதிக்கு மேற்பட்ட கடந்தகால லீவைப் பயன்படுத்த முடியாது.

10:1:4. ஓர் உத்தியோகத்தருக்கு இரண்டு தொடர்ச்சியான வருடங்களின் போது அவ்வாறு வழங்கப்பட்ட மொத்த காலங்கடந்த லீவு இரண்டு வருடங்களுக்கான அவரது இயல்பான லீவுப் பங்கை விஞ்சக் கூடாது-அதாவது 48 நாள்கள்.

10:1:5. வேறு சந்தர்ப்பத்தில் வருகை தருவது ஒழுங்காகவும் வேலையும் நடத்தையும் நன்றாகவுள்ள உத்தியோகத்தர் ஒருவருக்கு சுகவீனம் அல்லது விபத்து போன்ற காரணங்கள் நிமித்தம் லீவு தேவைப்படுமிடத்து செயலாளர் விடயத்தின் உண்மை நிலையையிட்டுத் தானே திருப்தியுற்றால், தனது தற்றுணிபின் பேரில் ஏதாவது ஓர் ஆண்டில் பயன்படுத்தாத காலங் கடந்த லீவின் இரண்டாவது காலப் பகுதி ஒன்றை உத்தியோகத்தர் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கலாம்.

அத்தகைய சூழ்நிலையில், இரண்டு தொடர்ச்சியான ஆண்டுகளில் ஓர் உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்ட மொத்த காலங்கடந்த லீவு நான்கு வருடங்களுக்கு அவருக்குரிய இயல்பான லீவுப் பங்கை விஞ்சக் கூடாது-அதாவது 96 நாள்கள்.

இச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் 1987-01-18இல் இருந்து செயல்வலுப் பெறும்.

ஒப்பம்: டி.பி.ஐ.பீ.எஸ். சிறிவர்த்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.